
வேதாத்திரியப்
பார்வையில்
திருவாசகத்தின்
அருட்பத்து
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் அருள் பத்து

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

அருள் பத்து. அதாவது, சிவபெருமானின் அருளை விரும்பிப் பாடும் பாடல்கள் இவை.

திருப்பெருந்துறையில் அருளப்பட்டவை.

பத்து பாடல்களைக் கொண்ட தொகுப்பு.

பெரும்பாலான பாடல்கள் 'அதெந்துவே என்று அருளாயே' என்று அமைந்துள்ளன.

'அதெந்துவே' என்ற சொல் கன்னடத்திலும் மலையாளத்திலும் உள்ளது. கன்னடத்தில் இதன் பொருள், 'பயப்படாதே'. மலையாளத்தில் இதன் பொருள், 'அது என்ன?' அல்லது 'அது எதற்காக?' என்பது.

## இதனுள்ளே

1. அழைத்தால் அருளும் இறைநிலை.
2. மூன்றாவது கண் சில உண்மைகள்!
3. நல்லொழுக்க வாழ்க்கை முறை
4. என் மனத்துள்ளே எழுகின்ற ஜோதியே
5. ஆண்டவன் கணக்கு
6. இறைநிலையோடு எண்ணத்தைக் கலக்க விட்டு
7. காலனை எட்டி உதைத்த இறைவன்
8. அன்பே கடவுள்
9. அருளே வடிவானவன்
10. பிறவியாகிய அலை வீசும் கடல் நடுவில்

# 1.அழைத்தால் அருளும் இறைநிலை

தூய பக்தியின் மூலம் இறைவனை அடையலாம். பக்தியுடன் அழைத்தால் இறைவன் ஓடோடி வருவான் என்பதற்கு பிரகலாத சரித்திரம் ஒரு சான்று.

பூமியிலோ, வானத்திலோ எனக்கு மரணம் நேரக்கூடாது. வீட்டுக்கு உள்ளேயோ, வெளியிலோ, இரவிலோ, பகலிலோ உயிர் பிரியக்கூடாது.

தேவர், மனிதர், அரக்கர், மிருகம், பறவை விஷ ஜந்துக்கள் மூலம் மரணம் சம்பவிக்க கூடாது. எந்த ஆயுதத்தாலும் என் உயிர் போகக் கூடாது என்று பல நிபந்தனைகளை விதித்து வரம் பெறுகிறான் இரண்யன்.

அதனால் உண்டான கர்வம், மமதை, ஆணவம் தலைக்கேறியது. தேவர்கள், முனிவர்கள், ரிஷிகள், அரசர்கள் உள்பட எல்லோரையும் துன்புறுத்தினான். துன்பமடைந்த அனைவரும் திருமாலிடம் முறையிட்டனர்.

இதற்கிடையில், இரண்யனின் மனைவி கர்ப்பமானாள். கலகமூட்டி நன்மையை ஏற்படுத்தும் நாரத மகரிஷிக்கு இது தெரியாமல் போகுமா? அங்கு சென்றார்.

இரண்யனுக்கு தெரியாமல், கர்ப்பத்தில் இருக்கும் சிசுவுக்கு நாராயண மந்திரத்தை உபதேசித்து வந்தார்.

இரண்யனின் மனைவிக்கு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. பிரகலாதன் என்று பெயரிட்டு சீராட்டி, பாராட்டி சகல கலைகளிலும் தேர்ச்சி பெறச் செய்தான் இரண்யன்.

ஆனால் அவனது எண்ணம், எதிர்பார்ப்புக்கு நேர் மாறாக இருந்தான் பிரகலாதன்.

இரண்யன் பரம விரோதியாக கருதும் திருமால் மீது மிகுந்த பக்தி வைத்து வழிபட்டு வந்தான்.

‘அப்பா! உங்கள் மீது எனக்கு பக்தி, பாசம், அன்பு, மரியாதை எல்லாம் உள்ளது. ஆனால் அதற்காக தெய்வ நிந்தனை செய்ய மாட்டேன்.
உங்களையும் என்னையும் படைத்து காப்பவன் அந்த பரந்தாமன் மகாவிஷ்ணுதான். ஹரி ஓம் நம என்று சொல்லும் வாயால் இரண்யாய நம என்று சொல்ல மாட்டேன்’ என்று தீர்மானமாக சொல்லி விட்டான்.

‘இந்த உலகில் வேறு தெய்வங்களே கிடையாது. நான்தான் சகலமானவற்றையும் ஆட்டிப் படைக்கும் கடவுள். என்னைத்தான் எல்லோரும் வழிபட வேண்டும்’ என்று ஊர் உலகத்தையே மிரட்டி வைத்திருக்கும் இரண்யன், மகனே தனக்கு எதிராக இருக்கிறானே என்பதால் ஆத்திரம் அடைந்தான்.

பிரகலாதனுக்கு பல்வேறு விதமான சோதனைகளை ஏற்படுத்தினான். கல்லைக் கட்டி கடலில் எறிந்தான்.

யானையை விட்டு துன்புறுத்தினான். பாம்பு, துஷ்ட ஜந்துக்களை ஏவினான். அக்னி ஜ்வாலையில் தள்ளினான். எதற்கும் பிரகலாதன் கலங்கவில்லை.

‘ஹரி ஓம் நம’ என்ற மந்திரத்தை பக்தியுடனும், நம்பிக்கையுடனும் உச்சரித்துக் கொண்டே இருந்தான்.

சீற்றம் அடைந்த இரண்யன், ‘ஹரி, ஹரி என்கிறாயே அவன் எங்கே இருக்கிறான்?’ என்று கேட்க, ‘தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார். எங்கும் இருப்பார் ஏகமூர்த்தி’ என்றான் பிரகலாதன்.

இரண்யனுக்கு கோபம் பல மடங்கு அதிகரித்தது. அருகே இருந்த தூணை காட்டி, ‘இந்த தூணில் உன் ஹரி இருக்கிறானா?’ என்றான்.

‘சத்தியமாக இருக்கிறார்’ என்று பிரகலாதனிடம் இருந்து தீர்க்கமாக பதில் வந்தது.

கையில் வைத்திருந்த கதையை எடுத்த இரண்யன் அந்த தூணை ஓங்கி அடித்தான். உண்மையான பக்தன் வாக்கு பொய்த்துப் போக

திருமால் விடுவாரா? தாமதிக்காமல் தூணைப் பிளந்துகொண்டு வெளியே வந்தார் நரசிங்க பெருமாள்.

மனிதனும், விலங்கும் கலந்த உருவம். ஆவேசத்துடன் கதையை உயர்த்திய இரண்யன் அவரையும் அடிக்கப் பாய்ந்தான்.

பகலும் இரவும் இல்லாத அந்தி வேளை அது. உள்ளேயும் இல்லாமல் வெளியேயும் இல்லாமல் வாசல்படிக்கு அவனை கொண்டு சென்றார் நரசிம்மர்.

தரையிலோ, ஆகாயத்திலோ, மேலோ, கீழோ எந்தவித ஆயுதத்தாலும் மரணம் நேரக் கூடாது என்று வரம் வாங்கி இருக்கிறானே.

அதனால் தன் மடியிலேயே அவனை கிடத்தி, தனது கூரிய நகத்தையே ஆயுதமாக்கி அவனை சம்ஹாரம் செய்தார் நரசிம்மர்.

அழைத்தால் இறைவன் ஓடிவந்து அருள்வான் என்று திருவாசகத்தில் மாணிக்கவாசகர் பாடுகிறார்.

"சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே
சுரி குழல் பணை முலை மடந்தை
பாதியே பரனே பால் கொள் வெண் நீற்றாய்
பங்கயத்து அயனும் மால் அறியா
நீதியே செல்வ திருப்பெருந்துறையில்
நிறை மலர்க் குருந்தம் மேவிய சீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே" (திருவாசகம் பா.458)

- ஒளிமயமானவனே! (சூரிய சந்திரர்களாய்) இரு சுடராய் விளங்குபவனே!
- இருளை விலக்கி ஒளியை பரவச்செய்யும் விளக்கே!
- சுருண்ட கூந்தலும் பருத்த முலைகளும் உடைய இளமை பொருந்திய உமையின் பாகனே!
- மேலான பொருளே!

- பால் போன்ற வெண்மை நிறமுள்ள திருநீற்றைப் பூசி இருப்பவனே!
- தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமமனும் திருமாலும் தேடி அறிய முடியாத மெய்ப் பொருளே!
- செல்வச் செழிப்புள்ள திருப்பெருந்துறையில் மலர்கள் நிறைந்த குருந்த மரத்தின் கீழ் எழுந்தருளிய மூலமே!
- அடியேனாகிய நான் உதவிக்கு அழைத்தால் என்ன வேண்டும் என்று கேட்டு அருளுவாயாக!

## Fraction Demands Totality Supplies. - வேதாத்திரியம்

"அவனில்தான் நீ. உன்னில் அவன்,
அவன் யார்? நீ யார்? பிரிவேது." (வேதாத்திரியம் ஞாக.பா.2)

உனக்குள்ளாக தெய்வமும், தெய்வத்திற்குள்ளாக நீயும் இருப்பதை உணரும்போது, தெய்வமும் நீயும் பிரிவற்ற நிலையில் ஒன்றாகிவிட முடியும்.



தெய்வ நிலையை நீ மறந்தபோது, மனிதன் என்ற சிறிய நிலையை அடைகிறாய்,

தெய்வத்தோடு இணைந்திருக்கும்போது எல்லாப் பெருட்களிலும் தன்னையும் தன்னில் எல்லாப் பொருட்களையும் உணரலாம்.

எனவே மாணிக்க வாசகர் சொன்னது போல் உதவிக்கு அழைத்தால் இறைநிலை உடனடியாக உதவி செய்யும்.

முழுமையின் பின்னம் தானே நீ? □□□□□□□□ □□□□□□□ □□□□□□□□ □□□□□□□□. பின்னம் கேட்டால் முழமை தருமே.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 2.மூன்றாவது கண் சில உண்மைகள்!

வழிவழியாக, நம் பாரம்பரியத்தில் நெற்றியில் அந்தக் கண் அமைந்திருப்பதாக சொல்வதேன்? ஏனெனில், கிரகித்துக்கொள்ளும் திறனோடு தொடர்புடைய ஆக்ஞா சக்கரம் நெற்றியில் அமைந்திருக்கிறது.

பார்வதிக்கு சிவனை திருமணம் செய்ய தணியாத ஆர்வம். அதனால் மன்மதனான காமதேவனை அனுகினார். பொதுவாக, மன்மதர்களின் வேலையில் அத்தனை சாதுர்யத்தை காண முடியாது.

நம் காமதேவனும் மரத்திற்கு பின்னால் ஒளிந்துகொண்டு சிவன் மீது காமபாணம் வீசினான்.



அந்த மலர் அம்பு சிவனை தீண்டியது. தியானத்திலிருந்து கண்திறந்த சிவனின் கண்முன்னே அழகு சொரூபமான பார்வதி அமர்ந்திருந்தார்.

திடீரென சிவனுக்குள் ஆசை பிறந்தது. பார்வதி மீது காதல் பிறந்தது. கிடுகிடுவென சுதாரித்துக் கொண்டவருக்கு கோபம் பீறிட்டு எழுந்தது. “யார் எனை தூண்டியது?”

அங்கே மரத்திற்கு பின்னால் நின்று, தன் வெற்றியை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த காமனை கண்டார் சிவன்.

“நீ என் சாதனாவை கலைத்து, எனக்குள் ஆசை மூட்டி விட்டாயா?” என்று கூறி, தன் நெற்றிக்க ண்ணை திறந்து, அவனை சாம்பலாக்கினார்.

ஆசைகளும், தாபங்களும், காமமும் வெளியிலிருந்து வருவதில்லை, அவை நமக்குள் இருந்தே எழுகின்றன. சிவன் வெளியே இருக்கும் காமனை எரிக்கவில்லை,

மாறாக, தனக்குள் இருந்த காமனை எரித்தார் என்பதையே இந்தக் கதை சொல்கிறது. ஆசையும் தாபமும் எழும்போதே தன் மூன்றாவது கண்ணை திறந்து, அதனை பஸ்பமாக்கினார் சிவன்.

நமக்கு வழங்கப்பட்டிருக்கும் இரு கண்களும் உலகை காண்பதற்கு. அவற்றால் பொருள் தன்மையில் இருப்பவற்றை மட்டுமே கிரகித்துக் கொள்ள முடியும்.

பொருள்தன்மை அல்லாத ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள நினைத்தால், உள்முகமாய் திரும்புவது ஒன்றே வழி. உள்முகமாய் திரும்ப ஒரு கண் இருந்தால், அதனைத்தான் மூன்றாவது கண் என்கிறோம்.

நெற்றியில் புடைத்துக் கொண்டிருக்கும் ஒரு உறுப்பை நாம் மூன்றாவது கண் எனச் சொல்வதில்லை.

வழிவழியாக, நம் பாரம்பரியத்தில் நெற்றியில் அந்தக் கண் அமைந்திருப்பதாக சொல்வதேன்?

ஏனெனில், கிரகித்துக் கொள்ளும் திறனோடு தொடர்புடைய ஆக்ஞா சக்கரம் நெற்றியில் அமைந்திருக்கிறது.

அனைவரது வாழ்விலும் மூன்றாவது கண் – அனுபவ உண்மையாய் ஆவதில்லை, ஒரு சாத்தியமாய் மட்டுமே இருக்கிறது. அது நமக்கு அனுபவப்பூர்வமான உண்மையாக வேண்டுமென்றால், அதை மெல்ல மெல்ல வளர்க்க வேண்டும். மூன்றாவது கண் தூண்டப்படாமல் இது சாத்தியமில்லை.

திருவாசகத்தில் மாணிக்கவாசகர், இறைவனை “நெற்றிக்கண் உடையவனே” என்று பாடுகிறார்.

“நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
   கண்ணனே விண் உளார் பிரானே
ஒருத்தனே உன்னை ஓலமிட்டு அலறி
   உலகு எலாம் தேடியும் காணேன்
திருத்தம் ஆம் பொய்கை திருப்பெருந் துறையில்
   செழு மலர் குருந்தம் மேவிய சீர்
அருத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
   அதெந்துவே என்று அருளாயே” (திருவாசகம் பா.459)

- கூத்தனே மலமற்றவனே!
- திருநீறு பூசி இருப்பவனே!
- நெற்றியில் கண் உடையவனே!
- விண்உலகில் உள்ளவர்களுக்கும் தலைவனே!
- ஒரு தனி முதல்வனே!
- திருந்திய நீர்நிலை உடைய திருப்பெருந்துறையில் செழுமையான மலர் நிறைந்த குருந்த மரத்தின் கீழ் எழுந்தருளிய பொருளே!
- ஒலமிட்டு பெரும் சத்தத்துடன் கூவி அழைத்து. உலகம் முழுவதும் தேடியும் உன்னைக் காண முடியவில்லை.
- அடியேன் உதவிக்கு அழைத்தால், என்ன வேண்டும் என்று கேட்டு அருளுவாயகா!

நெற்றிக்கண் ஆக்கினை தீட்சைப் பெற்று பயிற்சி பெற மனவளக்கலை மன்றங்கள் நோக்கி வாருங்கள்.

நெற்றியில் உச்சியில் ஞாபகமாயிரு
உற்றுற்றுப் பார்த்திடு உன்னை உலகைபின்
கற்றபடி நட கருத்து விழிப்புடன்
பற்றற்று வாழும் பழக்கம் உண்டாகிடும். (வேதாத்திரி மகரிஷி)

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.



# 3. நல்லொழுக்க வாழ்க்கை முறை

சிவபெருமானும் பார்வதி தேவியும் ஒரு முறை பார்வதி தேவியார் விளையாட்டுக்காக சிவபெருமானின் கண்களை மூடியதால் உலகம் முழுவதும் இருள் சூழ்ந்ததாக ஒரு கதை உண்டு.

சிவபெருமானின் இரண்டு கண்கள் சூரியன் மற்றும் சந்திரன் என்று கூறப்படுகிறது. ஆகவே பார்வதி தேவி சிவபெருமானின் கண்களை மூடியதும் இந்த பிரபஞ்சமே இருளில் மூழ்கியது.

ஆகவே பிரபஞ்சத்திற்கு ஒளியை வழங்க சிவபெருமான் தனது மூன்றாவது கண்ணை திறந்ததாக கூறப்படுகிறது.

யோகிகளின் வழிகாட்டி சிவபெருமானின் நெற்றிக்கண் ஞான ஒளி மற்றும் விழிப்புணர்வைக் குறிக்கும்.

எல்லாவற்றையும் அறிந்த யோகியாக சிவபெருமான் அறியப்படுகிறார். அவருக்கு பின்னால் வந்த யோகிகள் மற்றும் துறவிகளுக்கு அவர் ஒரு உத்வேகத்தைக் கொடுக்கிறார்.

சிவபெருமான் ஒரு யோகியாக இருந்து பல ஆண்டுகள் கடுமையான தவத்திற்கு பிறகு ஞான ஒளியைப் பெற்றார். இந்த மூன்றாவது கண் என்பது ஞானம் மற்றும் நீதியின் கண்ணாகும்.

அவருக்கு பின்னால் வரும் துறவிகள் மற்றும் முனிவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அவர் விளங்குகிறார். உண்மையான எழுச்சி மற்றும் விழிப்புணர்வு இவர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.

சிவபெருமானின் மூன்றாவது கண் கடந்த காலம் மற்றும் எதிர்காலத்தை அவர் பார்க்க உதவுகிறது. அவரைப் பின்தொடர்ந்து வரும் துறவிகளும் எதிர்காலத்தைப் பற்றிய ஞானத்தை அறிந்து

கொள்ளும் நிலையை அடைய வேண்டும். அதிகரித்த ஞானம் மற்று சித்தியை குறிப்பதாக இந்த மூன்றாவது கண் அமைகிறது.

ஒரு சாதாரண மனிதனின் வழிகாட்டி பொருள் சார்ந்த இந்த பூலோகத்தில் எல்லாவற்றையும் அடைந்திட நமது கண்கள் நமக்கு உதவுகிறது.

இந்த கர்ம ஷேத்திரத்தில் நாம் வாழ்வதற்கு கண்கள் அவசியமாகிறது. கவர்ந்து இழுக்கும் இந்த உலகின் பொருட்கள் நமது ஆன்மீக சிந்தனைக்கு இடையூறாக இருக்கும்.

இந்த ஆன்மீக பாதை நம்மை சொர்க்கத்திற்கு அழைத்து செல்லும். இந்த பாதையை நாம் தேர்ந்தெடுக்கும் போது பல இடையூறுகள் நம்மை பாதிக்கும்.

அந்த நேரத்தில் நமது சிந்தனை ஒரு நிலைப்பட வேண்டும். நம்மை நாமே வழி நடத்தி சரியான பாதையில் பயணிக்க வேண்டும். இந்த எழுச்சி மற்றும் விழிப்புணர்வைக் குறிப்பது சிவபெருமானின் மூன்றாவது கண்.

கவனச் சிதறல் உண்டாகும் நேரத்தில் சற்று நிதானித்து நமது உண்மையான குறிக்கோள் என்ன என்பது பற்றி சிந்தித்து செயல்பட வேண்டும்.

எனவே, ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மூன்றாவது கண் உள்ளது, அதாவது ஒழுக்கநெறிக்கான வழிகாட்டுதல் தேவைப்படும் சமயத்தில் அவர் விழிப்புடன் இருக்க அதனைப் பயன்படுத்த வேண்டும்.

“எங்கள் நாயகனே என் உயிர் தலைவா
    ஏல வார் குழலி மார் இருவர்
தங்கள் நாயகனே தக்க நல் காமன்
    தனது உடல் தழல் எழ விழித்த
செம் கண் நாயகனே திருப்பெருந் துறையில்
    செழு மலர் குருந்தம் மேவிய சீர்
அம் கணா அடியேன் ஆதரித்து அழைத்தால்

அதெந்துவே என்று அருளாயே” (திருவாசகம் பா.460)

- எங்கள் தலைவனே!
- என் உயிர் நாயகனே!
- மயிர்ச்சாந்து அணிந்த கூந்தலை உடைய இருவருக்கு (உமை, கங்கை) கணவனே!
- அழகில் சிறந்த மன்மதன் உடல், நெருப்பில் வேகுமாறு நெற்றிக் கண்ணைத் திறந்த பெருமானே!
- திருப்பெருந்துறையில் செழுமையான மலர்கள் நிறைந்த குருந்த மரத்தின்கீழ் எழுந்தருளிய அழகிய கண்ணை உடையவனே!
- அடியேனாகிய நான் உதவிக்கு அழைத்தால், என்ன வேண்டும் என்று கேட்டு அருளுவாயகா!

அறிவைப் பயன்படுத்தாத மனிதர்கள் மிருக குணம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய இச்சை, கோபம், கெட்ட உணர்வுகள் ஆகியவற்றை அவர்களால் கட்டுப்படுத்த முடியாது.

புத்திசாலியாக இருப்பவன் அவற்றைக் கட்டுப்படுத்தி அளவு முறையோடு உபயோகிக்கிறான்.

இப்படிக் கட்டுப்பாட்டுடன் வாழ்வதற்குப் பெயர்தான் பிரம்மச்சரியம். இன்று நாம் பெண் உறவை மறுப்பதே பிரம்மச்சரியம் என்று சொல்லி வருகிறோம்.

இது தவறு. மனதைக் கட்டுப்படுத்தி எல்லா விதத்திலும் தன்னுடைய சக்திகளை சுய கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்து, அவற்றின் மூலம் சிறந்த பலன்களை அடைவதுதான் பிரம்மச்சரியம்.

மனிதனின் உடல் சக்தி, அவனுக்கு ஆண்மையையும், இளமையையும் தரும் வீரியம் இவையெல்லாம் அவனுடைய நல்வாழ்விற்காக இறைவன் அளித்த செல்வங்கள்.

இவற்றைப் பாதுகாத்து, அளவுடன் செலவிடுபவனே மிகச் சிறந்த பலனைப் பெறுகிறான்.

அவனிடம்தான் பொலிவும், செயல் வேகமும், புத்திசாலித்தனமும் குடி கொள்கின்றன. அவனே உண்மையான பிரம்மச்சாரி என்றார்.

(இவற்றைப் பாதுகாத்து அளவுடன் செலவிடுபவனே என்ற வாக்கியத்தைக் கவனிக்கவும்.) ஞானிகள் என்றும் இயற்கைக்கு முரணான காரியங்களை ஆதரிப்பதில்லை.

- வேதாத்திரியத்தில் உடல்நலம் காக்க உடற்பயிற்சியும்,
- வித்து சக்தியைப் பெருக்கி, அதில் உயிர் சக்தியைத் திணிவு பெறச் செய்து, அந்த உயிர் சக்தியைப் பிரித்தெடுத்து மேலேற்ற காயகல்பப் பயிற்சியும்,
- மனவளம் காக்க அகத்தாய்வுப் பயிற்சிகளும்,
- கருமையத் தூய்மை பெற்று வினைகளை அழித்து ஆன்ம ஈடேற்றம் பெறத் தவப்பயிற்சிகளும் தரப்படுவதால்,

இல்வாழ்வில் உள்ளவர்களும் குண்டலினி தவத்தில் வெற்றி பெற்று வீடுபேற்றைப் பெற முடியும் என்பதை உணர்ந்திடுங்கள்.

"மண்மீது பெண்துணையால்
பொன் கொண்டே வாழ்கின்றோம்
மாற்றுவதேன் மூவாசை?
மதிகொண்டே பயன்கொள்வோம்".

.

## இச்சையின் வலிவு: வேதாத்திரியம்

"எச்செயலும் மூலமெனும் நினைப்பாலாகும்.
இன்ப துன்பக் காரணமு மதுவே தேர்வோம்,
இச்சைஎனும் தீயெழுந்து எரியும்போது
இயங்கு முடற் கருவிகளா லறிவைக் கொண்டு
அச்சமற அனுபவித்தே அணைக்கலாகும்;
அதற்கு ஒரு மாற்றமில்லை யதனால் மேலோர்

நச்சுவிளை இச்சைகளை விளைவிக்காத
நல்லொழுக்க வாழ்க்கை முறை வகுத்துள்ளார்கள்".
வேதாத்திரி மகரிஷி.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 4. என் மனத்துள்ளே எழுகின்ற ஜோதியே

தனக்கு அருள் புரிய வேண்டும் என்பதற்காக பெரும் சோதியில் இருந்து வெளிப்பட்ட என் தந்தையே" என்று திருவாசகம் பாடுகிறது,

திருவாசகத்தில் ஜோதி என்ற வார்த்தையை 42 இடங்களில் மாணிக்கவாசகர் பயன்படுத்தியுள்ளார்.

1. மாசற்ற ஜோதி மலர்ந்த மலர்ச்சடரே 1-62
2. ஜோதியனே, துன்இருளே தோன்றாப் பெருமையனே 1-72
3. தூண்டு ஜோதி தோற்றிய தொன்மையும் 2-74
4. கருஆர் ஜோதியில் கரந்த கள்ளமும் 2-55
5. தூயமேனி, சடர் விடு ஜோதி 2-112
6. அருக்கனில் ஜோதி அமைத்தோன் 3-20
7. பரம்பரம் ஜோதிபட பரனே போற்றி 4-222
8. பரஞ் ஜோதி 88
9. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியை 155
10. பாசம் பரஞ் ஜோதிக்கு என்பாய் 156
11. கேழில் பரஞ் ஜோதி கேழில் பரங்கருணை 162
12. ஜோதி திறம்பாடி, சூழ்கொன்றைத்தார் பாடி 168
13. ஜோதியுமாய் இருள் ஆயினார்க்கு 214
14. மாஏறு ஜோதியும் வானவரும் தாம்அறியா 215
15. பவமாயம் காத்து என்னை ஆண்டுகொண்ட பரஞ்ஜோதி 238
16. பத்திக் கடலுள் பதித்த பரஞ்ஜோதி 246
17. தங்குலவு ஜோதித் தனிஉருவம் வந்தருவி 335
18. ஜோதி மணிமுடி 346
19. என் உள் எழு பரஞ்ஜோதி 386

20. என் மனத்துள்ளே எழுகன்ற ஜோதியே 391
21. ஆனந்தமாக்கும் என் ஜோதி 393
22. ஜோதியாய் தோன்றும் உருவமே 394
23. பாரோர் விண்ணோர் பரவிஏத்தும் பரனே பரஞ்ஜோதி 422
24. கடிஆர் ஜோதி கண்டு கொண்டு 424
25. முத்து மாமணி மாணிக்க வயிரத்த பவளத்தில் முழுச்ஜோதி 432
26. எழுதரு சுடர்ச்ஜோதி 433
27. ஜோதியே! சுடரே! சூழ்ஒளி விளக்கே! 456
28. இருள் நீங்க ஜோதி இனித்தான் துணியாயே 489
29. கதிரை மறைத்தன்ன ஜோதி 525
30. ஈண்டிய மாயா இருள்கெட எப்பொருளும் விளங்கத் தூண்டிய ஜோதியை 529
31. துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம் தொடக்கெலாம் அறுத்த நற்ஜோதி 543
32. பரஞ்ஜோதி, பசுபதீ! 555
33. யாவர் ஆயினும் அன்பர் அன்றி அறிஒணா மலர்ச் ஜோதியான் 577
34. பொய்தனை ஒழிவித்திடும் எழில்கொள் ஜோதி 584
35. முத்தனை முதலர் ஜோதியை முக்கண் அப்பனை 586
36. மறை பயின்ற வாசகன் மாமலர் மேஜோதி 587
37. ஒளிவளர் ஜோதி எம் ஈசன் 593
38. தூவெள்ளை நீறணி எம்பெருமான் ஜோதி மயேந்திரநாதன் 595
39. மெய்யடியார்க்கு அருள்துறை அளிக்கும் ஜோதியை 602
40. இன்பம்பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும் துன்பம் தொடர்வறுத்துச் ஜோதியாய் 625
41. துண்என என்உளம் மன்னியஜோதி 639
42. அரிய பரஞ்ஜோதீ 647

“கமல நான்முகனும் கார் முகில் நிறத்துக்
    கண்ணனும் நண்ணுதற்கு அரிய
விமலனே எமக்கு வெளிப்படாய் என்ன
    வியன் தழல் வெளிப்பட்ட எந்தாய்
திமில நான்மறை சேர் திருப்பெருந் துறையில்
    செழு மலர் குருந்தம் மேவிய சீர்
அமலனே அடியேன் ஆதரித்து அழைத்தால்

அதெந்துவே என்று அருளாயே" (திருவாசகம் பா.461)

- தாமரை மலரில் எழுந்தருளி இருக்கும் பிரம்மனும் கரிய நிறமுடைய திருமாலும் நெருங்குதற்கு அருமை உடைய மலமற்றவனே!
- எமக்கு வெளிப்பட்டு அருள வேண்டும் என்பதற்காக, பெரும் சோதியில் இருந்து வெளிப்பட்ட எம் தந்தையே!
- நான்கு வேதங்கள் ஒலிக்கும் திருப்பெருந்துறையில் செழுமையான மலர்கள் நிறைந்த குருந்த மரத்தின் கீழ் எழுந்தருளிய பாசம் அற்றவனே!
- அடியேனாகிய நான் உதவிக்கு அழைத்தால், என்ன வேண்டும் என்று கேட்டு அருளுவாயகா!

ஜோதி என்றால் என்ன? விடையாக வருகிறார் மகரிஷி.

உண்மையான சிவம் வெட்டவெளிதான் (சுத்தவெளி) என்றால், அது எல்லாவற்றிலும் ஊடுருவிப் பாயக் கூடியது.

அது வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்கின்ற நான்கு தன்மையும் உடையதாக இருக்கிறது.

அதை வைத்து நீங்கள் எந்தக் கணக்கு வேண்டுமானாலும் போடுங்கள். ஆனால் தாயுமானவர் "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்" என்ற வார்த்தைகளில் விளக்கினார்.

பிரகாசம் என்பதை ஜோதி என்று அந்தக் காலத்தில் சொன்னார்கள். அறிவைக் குறிப்பதற்காகத்தான் அந்த வார்த்தையையே போட்டிருந்தார்கள்.

ஜோதி என்றாலும், விளக்கு என்றாலும் ஒன்றே. "விளக்கம்" என்பதிலிருந்துதான் "விளக்கு" என்ற வார்த்தையே வந்திருக்கிறது.

விளக்குவதுதான் அறிவு. அதனால், அந்த அறிவை "சுடர்" என்றும், ஜோதி என்றும், விளக்கு என்றும் சொல்வார்கள்.

வள்ளலார் கூட ஜோதி என்று அறிவைத்தான் சொல்கிறார். இறைநிலை அறிவாக இருப்பதானால், அது ஜோதி வடிவமானது என்று சொல்கிறார்கள்.

அந்த முறையில் இறைநிலையை உணர்ந்து கொண்டீர்களானால், அதிலிருந்துதான் செயல்விளைவு தத்துவத்திற்கு வரலாம்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருப்பதனால், அது எல்லோருள்ளும் இருக்கிறது.

அதனால்தான் எல்லோர் செயலையும் கண்காணிப்பதற்கு அதனால் சுலபமாக முடிகிறது.

உங்களுக்குள்ளேயே உள்ளதால், செயலுக்குத் தக்க விளைவை நீங்களே பெற்றுக் கொள்கிறீர்கள் என்கிறார் வேதாத்திரி மகரிஷி.

மாணிக்கவாசகர் சொன்னதை விளக்கமாகச் சொன்னார் மகரிஷி.

பிரபஞ்சத்தின் காரணப் பொருளாகவும் காரண கர்த்தாகவும் இருப்பது பேரறிவு மற்றும் பேராற்றலுமான சுத்தவெளியே என்ற மாபெரும் உண்மையை மானுடத்திற்கு தந்தவர் நமது அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியே.

வாழையடி வாழையென வந்த சித்தர் மரபில் வந்தவர்களே மாணிக்கவாசககரும் மகரிஷியும்.

மாணிக்கவாசகரின் கருத்தினை உள்வாங்கி, அதோடு விஞ்ஞானத்தையும் சேர்த்து, மகரிஷி உலகெங்கும் உள்ள மக்களின் இதயத்தை தமது புத்தம்புது கருத்துக்களால் தொட்டார்

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.  வாழ்க வளமுடன்.

# 5. ஆண்டவன் கணக்கு

காசியபர் எனும் அந்தணர், கல்வி கேள்விகளில் சிறந்தவர். என்ன காரணத்தாலோ, அவருக்கு பார்வை குறை ஏற்பட்டு, ஒரு கட்டத்தில், முழுவதுமாகவே தெரியாமல் போனது.

இதனால், பார்வை திரும்ப கிடைக்க வேண்டி, திருச்செந்தூர் முருகப்பெருமானை சரணடைந்தார்.

அதிகாலையில் எழுந்து, கடல் மற்றும் நாழிக்கிணற்றில் நீராடுவதும், அவன் நாமத்தை பாராயணம் செய்வதுமாக திருச்செந்தூரான் சன்னிதியே கதியென்று கிடந்தார்.

பிரார்த்தனையின் பலனாக, திடீரென்று ஒரு நாள், அவருக்கு மங்கலாகப் பார்வை தெரியத் துவங்கியது.

மகிழ்ச்சியில் கூத்தாடினாலும், 'திருச்செந்தூரா... உன் அருளால், என் பார்வை முழுமையாகத் தெரியாதா...' என வேண்டி, கண்ணீர் விட்டார்.

அப்போது, கோவிலுக்கு வந்த பக்தர் ஒருவர் அருளாடி, 'காசியபா... என் பக்தனும், இந்நாட்டு அரசனுமான ஜகவீரன் இங்கு வருகிறான்; அந்த உத்தம பக்தனின் கை, உன் மீது பட்டதும், உனக்குப் பார்வை முழுமையாகத் தெரியும்...' என்றார்.

அதைக் கேட்டதும், அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்பட்டாலும், அதேசமயம் கலக்கமாகவும் இருந்தது. காரணம், பார்வையற்றவர்களை அரசர் பார்க்க கூடாது என்பது அக்கால சம்பிரதாயம். இந்த மனப் போராட்டத்தில் காசியபர் அமர்ந்திருக்க, சிறிது நேரத்தில், கோவிலுக்கு வந்தார் அரசர் ஜகவீரன்.

அவரிடம் அருள் வாக்கு பற்றிய தகவல் எடுத்துரைக்கப்பட்டது.

ஆனால், அரசரோ, 'நான் அரசன் என்பதால், அதிகாரம் வேண்டுமானால் என்னிடம் இருக்கலாமே தவிர, அற்புதம் செய்யக் கூடிய அளவிற்கெல்லாம் என்னிடம் சக்தி கிடையாது...' என்று சொல்லி, சாமி தரிசனம் செய்வதில் முனைப்பாக இருந்தார்.

அன்றிரவு, அரசர் ஜகவீரன், கோவிலிலேயே தங்க வேண்டி இருந்ததால், சண்முக விலாச மண்டபத்தில் வந்து அமர்ந்தார்.

திடீரென்று அவருக்கு என்ன தோன்றியதோ, 'அந்த பார்வையற்றவரை அழைத்து வாருங்கள்...' என்றார்.

அரசு பணியாளர்கள், சம்பிரதாயத்தை எடுத்துச் சொல்லி மறுத்த போதும், பிடிவாதமாக அவரை அழைத்து வரச் சொன்னார் அரசர்.

காசியபரைப் பார்த்ததும், மனம் கசிந்த அரசர், 'நீங்கள் நாளைக் காலை நீராடி, முருகன் சன்னிதிக்கு வாருங்கள்; அவன் திருவருள்படி நடக்கட்டும்...' என்றார்.

மறுநாள் காலையில், 'முருகா... உன் சொற்படி இவருக்குப் பார்வை வராவிட்டால், நான், என் தலையை அறுத்துக் கொண்டு இறப்பேன்...' என்று கூறி, விபூதியை எடுத்து காசியபரின் கண்களில் ஊதி, அவர் கண்களை, தன் கைகளால் மெல்ல வருடினார் அரசர்.

அடுத்த வினாடி, காசியபருக்கு பார்வை திரும்பியது. அனைவரும் அரசரை வாழ்த்த, அவரோ, 'முருகன் எனக்களித்த உயிர்ப்பிச்சை இது; ஆறுமுகனின் அருள் இதை விடப் பெரியது...' எனக் கூறி, அமைதியாக வெளியேறினார்.

“துடி கொள் நேர் இடையாள் சுரி குழல் மடந்தை .
    துணை முலை கண்கள் தோய் சுவடு
பொடி கொள் வான் தழலில் புள்ளி போல் இரண்டு
    பொங்கு ஒளி தங்கு மார்பினனே
செடி கொள் வான் பொழில் சூழ் திருப்பெரு ந்துறையில்
    செழு மலர் குருந்தம் மேவிய சீர்

அடிகளே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே” (திருவாசகம் பா.462)

- உடுக்கை போன்ற இடையினையும் சுருண்ட கூந்தலையும் உடைய உமாதேவி கம்பை நதியில் வெள்ளம் பெருகி வர, தான் பூசித்த இலிங்கத் திருமேனியை இறுகத் தழுவிக் கொள்ள தனது முலையின் சுவட்டை இரண்டு புள்ளிகளாய் திருநீறு பூசிய தன் மார்பில் ஏற்றுக் கொண்டவனே!
- அழகிய உயர்ந்த சோலைகள் சூழந்த திருப்பெருந்துறையில் செழுமையான மலர்கள் நிறைந்த குருந்த மரத்தின் கீழ் எழுந்தருளிய கடவுளே!
- அடியேனாகிய நான் உதவிக்கு அழைத்தால், என்ன வேண்டும் என்று கேட்டு அருளுவாயாக!

## ஆண்டவன் கணக்கு வேதாத்திரியம்

தப்புக் கணக்கிட்டுத் தான் ஒன்றை எதிர்ப்பார்த்தால்
ஒப்புமோ இயற்கைவிதி? ஒழுங்கமைப்புக் கேற்றபடி
அப்போதைக் கப்போதே அளிக்கும் சரிவிளைவு
எப்போதும் கவலையுற்று இடர்படுவர் இதையுணரார்!
(மாக்கோலம்)

ஆண்டவனைக் கேட்டு இனிமேல் எதுவும் வாங்கிட முடியும் என்று நீங்க கணக்குப் போட்டால் அவன் ஏமாந்தவன் அல்லன். அவனிடம் ஒரு நியதி இருக்கிறது.

நீங்கள் என்ன செய்தீர்களோ அந்தச் செயலின் விளைவாக, நல்லதையோ, கெட்டதையோ, உங்கள் நோக்கத்திற்குத் தக்கவாறு, செய்யும் திறனுக்குத் தக்கவாறு அவன் செயல் விளைவாகத் தருவான். அதுதான் அவன் கொடுக்கக்கூடிய வரம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த இடத்தில் சமுதாயத்திற்கு நலம் தர வேண்டும், கடமை செய்கின்றோம் என்பது ஒன்று ஆயிற்று, இரண்டாவது நல்லதையே

ஒவ்வொரு செயலிலும் செய்து கொண்டே வந்தால் இறைவனுடைய ஆற்றல் நாம் காணக்கூடிய அளவுக்கு ஒரு விழிப்பு நிலை வந்துவிடுகிறது.

ஆக இறைவனை உணர்ந்து கொள்வது என்பது சமுதாயத்திற்கு நலம் தருவதாகும்.

இந்த நோக்கம் வெற்றிபெற வேண்டுமானால் ஒவ்வொருவரும் நல்ல செயலை செய்யப் பழகிக் கொள்ள வேண்டும்.

அதன் பிறகு அவ்வாறு செய்து பலன் காண வேண்டும். அதை மற்றவர்களுக்கும் பரப்ப வேண்டும்.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வாழமுடன்.

## 6. இறைநிலையோடு எண்ணத்தைக் கலக்க விட்டு

மலைகளின் ஆழத்துக்குள், ஒரு மாபெரும் கோயில் மணி ஒலிக்கப்படுகிறது. காலைக் காற்றில், அது அதிர்ந்து கொண்டிருப்பதை நீங்கள் கேட்கிறீர்கள்.

உங்கள் மனத்தில் உள்ள எண்ணங்கள் எல்லாம் மறைந்து போகின்றன. அங்கு நீங்களாக இருக்கும் எதுவும் இல்லை; நீங்கள் அல்லாத எதுவும் இல்லை. முழுப் பிரபஞ்சத்தை நிறைக்கும் மணியின் ஓசை மட்டுமே இருக்கிறது.

வசந்த காலம் வருகிறது.
நீங்கள் பூக்கள் மலர்வதையும், பட்டாம்பூச்சிகள் பறப்பதையும் பார்க்கிறீர்கள். பறவைகள் பாடுவதைக் கேட்கிறீர்கள். இதமான பருவத்தைச் சுவாசிக்கிறீர்கள். இந்த வசந்தகாலம் என்பது உங்கள் மனம் மட்டும்தான். இது ஒன்றுமே இல்லை.

நீங்கள் நயாகரா அருவிக்குச் செல்கிறீர்கள். அங்கே படகை எடுத்துக்கொண்டு அருவிக்குக் கீழே செல்கிறீர்கள். அருவியிலிருந்து விழும் நீரானது உங்கள் முன்னால் இருக்கிறது. உங்களைச் சுற்றி இருக்கிறது. உங்களுக் குள்ளும் இருக்கிறது. உடனடியாக, நீங்கள் ஆஆஆஆ! என்று கத்துகிறீர்கள்.

இந்த அனுபவங்களில் எல்லாம், புறமும் அகமும் ஒன்றாகின்றன. இதுதான் ஜென் மனம்.

உண்மையான இயல்பில் எதிர்நிலைகள் இல்லை. பேச்சும் சொற்களும் தேவையில்லை. யோசிக்காமலேயே, எல்லா விஷயங்க ளுக்கும் எப்படி இருக்கின்றனவோ, அப்படியே சரியாக இருக்கின்றன. உண்மையும் இது போன்றதுதான். பிறகு, ஏன் நாம் சொற்களைப் பயன்படுத்துகிறோம்? ஏன் புத்தகத்தை உருவாக்குகிறோம்?

கீழைத்தேய பாரம்பரிய மருத்துவத்தில், உங்களுக்கு வெப்பம் தொடர்பான நோய் இருந்தால், நீங்கள் வெப்பமான மருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். சொற்கள், பேச்சு ஆகிய இரண்டிலும் பெரும்பாலானவர்கள் மிகுந்த பற்றுடன் இருப்பார்கள். அதனால், இந்த நோயைச் சொல்-பேச்சு மருத்துவத்தின் மூலமே குணப்படுத்த வேண்டியிருக்கும்.

பெரும்பாலானவர்களுக்கு இந்த உலகத்தைப் பற்றிய மயக்கமான தோற்றமே இருக்கும்.

அவர்கள் அது எப்படி இருக்கிறதோ, அப்படி அதைப் பார்க்க மாட்டார்கள். அவர்கள் உண்மையைப் புரிந்துகொள்ள மாட்டார்கள்.

நல்லது என்ன, கெட்டது என்ன? யார் நல்லதை உருவாக்குகிறார்கள், யார் கெட்டதை உருவாக்குகிறார்கள்? அவர்கள் தங்கள் கருத்துகளுடன் தங்களது முழுமையான வலிமையோடு ஒட்டிக்கொள்கிறார்கள்.

ஆனால், ஒவ்வொருவரின் கருத்தும் வித்தியாசமானது. உங்கள் கருத்துச் சரியானது, வேறொருவரின் கருத்துத் தவறானது என்று உங்களால் எப்படிச் சொல்ல முடியும்? இதுதான் மாயை.

உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், உங்கள் சூழ்நிலை, உங்கள் நிலை, உங்கள் எல்லாக் கருத்துகளையும் விட வேண்டும். பிறகு, உங்கள் மனமானது யோசித்தலுக்கு முன் இருப்பதாக மாறும். “யோசித்தலுக்கு முன்” என்பது தெளிவான மனம். தெளிவான மனத்துக்கு அகமும் புறமும் கிடையாது. இப்படி இதுவாக இருத்தல் கொள்கிறது. “இப்படி இது இருக்கிறது” என்பதே உண்மை.

“நீங்கள் இந்த வாயிலைக் கடந்து செல்ல வேண்டுமென்றால், சிந்திக்க இடம் கொடுக்காதீர்கள்” என்று ஒரு புகழ்பெற்ற ஆசிரியர் சொல்லியிருக் கிறார்.

நீங்கள் யோசித்துக் கொண்டிருந்தால், ஜென்னைப் புரிந்துகொள்ள முடியாது என்று இதற்கு அர்த்தம். யோசித்தலுக்கு முன் இருக்கும் மனத்தைத் தக்கவைத்துக் கொண்டால், அதுதான் ஜென் மனம்.

மற்றொரு ஜென் குரு, “புத்தர் கற்பித்த எல்லாமே உங்கள் சிந்தனையைச் சரி செய்யத்தான். ஏற்கெனவே சிந்தனையை நிறுத்திவிட்டால், புத்தரின் சொற்களுக்குத் தேவையே இல்லை.” என்று சொல்கிறார்.

“வடிவம் என்பது வெறுமை, வெறுமை என்பது வடிவம்” என்று இருதய சூத்திரம் சொல்கிறது.

“வடிவம் இல்லாவிட்டால், வெறுமை இல்லை” என்று இதற்கு அர்த்தம்”. ஆனால், “வடிவம் இல்லாவிட்டால், வெறுமை இல்லை” என்பதன் உண்மையான அர்த்தம், “வடிவம் வடிவம் தான், வெறுமை வெறுமை தான்”.

நீங்கள் யோசித்துக்கொண்டிருந்தால், உங்களால் இந்தச் சொற்களைப் புரிந்துகொள்ள முடியாது. நீங்கள் யோசிக்காமல் ‘அதன் இயல்பில்’ இருந்தால், அதுதான் புத்தரின் இயல்பு.

‘புத்தரின் இயல்பு என்ன?’

மலைகளின் ஆழத்துக்குள், ஒரு மாபெரும் கோயில் மணி ஒலிக்கப்படுகிறது.

உண்மையும் வெறுமனே இது போலதான்.

“நினைப்பவர் மனதில் மிகுந்த சுவையைத் தரும் அமிழ்தம் போன்றவனே! “ என்கிறது திருவசாகம்.

“துப்பனே தூயாய் தூய வெண்ணீறு
துதைந்து எழு துளங்கு ஒளி வயிரத்து
ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தில்
உறு சுவை அளிக்கும் ஆர் அமுதே
செப்பம் ஆம் மறை சேர் திருப்பெருந் துறையில்
செழு மலர் குருந்தம் மேவிய சீர்
அப்பனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே” (திருவாசகம் பா.463)

- பவளம் போன்ற சிவந்த மேனியனே!
- தூய்மை உடையவனே!
- தூய்மையான திருநீற்றைப் பூசி இருப்பவனே!
- ஒளியால் சிறந்து விளங்கும் வைரம் போன்றவனே!
- நினைப்பவர் மனதில் மிகுந்த சுவையைத் தரும் அமிழ்தம் போன்றவனே!
- வேதங்கள் செப்பமுற ஒலிக்கும் திருப்பெருந்துறையில் செழுமையான மலர்கள் நிறைந்த குருந்த மரத்தின் கிழ் எழுந்தருளிய எம் தந்தையே!
- அடியேனாகிய நான் உதவிக்கு அழைத்தால், என்ன வேண்டும் என்று கேட்டு அருளுவாயகா!

இறைநிலையோடு மனதை கலக்கவிட்டால் மனம் அமிழ்தம் போல இருக்கும் என்ற திருவாசகத்தை வேதாத்திரியம் எப்படி சொல்கிறது பாருங்கள்.

# நிறைநிலை: வேதாத்திரியம்

"இறைநிலையோடு எண்ணத்தைக் கலக்க விட்டு
ஏற்படும் ஓர் அமைதியிலே விழிப்பாய் நிற்க,
நிறைநிலையே தானாக உணர்வதாகும்
நித்தம் நித்தம் உயிர் உடலில் இயங்கு மட்டும்;
உறைந்து உறைந்து இந்நிலையில் பழகிக்கொள்ள
உலக இன்பங்களிலே அளவு கிட்டும்,
கறைநீங்கி அறிவு மெய்ப்பொருளாய் நிற்கும்
கரைந்துபோம் தன்முனைப்பு; காணும் தெய்வம்."(வேதாத்திரியம்)

இமைப்பொழுதும் நெஞ்சில் நீங்காமல் இறைநிலையோடு மனதை கலக்கவிட்டு ஆனந்தமாக வாழ்வோமாக.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வாழமுடன்.




# 7. காலனை எட்டி உதைத்த இறைவன்

நம் வாழ்க்கையின் முழுக் கவனத்தையும் எவ்வளக்கெவ்வளவு எல்லைக்குட்பட்ட பொருள்களின் மேல் நாம் செலுத்துகிறறோமோ, அவ்வளவுக்கவ்வளவு விரைவாக நாம் மரணத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம்.

நம் வாழ்க்கையை, மற்றவர்கள் வாழ்க்கையோடும் பிரபஞ்ச வாழ்க்கையோடும் ஐக்கியப்படுத்திக் கொள்ளும்போதுதான் நாம் உண்மையில் வாழ்கிறோம்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த அற்பமான எல்லைக்குட்பட்ட வாழ்க்கைதான் மரணம், மரணமேதான்,

இதனால்தான் நமக்கு மரண பயம் ஏற்படுகிறது. இவ்வுலகில் ஒரே ஒரு உயிர் வாழ்ந்திருக்கும்வரை நானும் வாழ்கிறேன் என்று உணரும்போதுதான் அவனால் மரண பயத்தை வெல்ல முடிகிறது. (விவேகாந்தரின் ஞானதீபம்-சுடர் 4–பக்.44–45)

“எமனைக் காலால் உதைத்து தண்டித்தவனே!” என்று மரணத்தை போக்கிய இறைவனை புகழ்ந்து பாடுகிறது திருவாசகம்.

“மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
  மேலவர் புரங்கள் மூன்று எரித்த
கையனே காலால் காலனைக் காய்ந்த
  கடும் தழல் பிழம்பு அன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையில்
  செழு மலர் குருந்தம் மேவிய சீர்
ஐயனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
  அதெந்துவே என்று அருளாயே” (திருவாசகம் பா.464)

- மெய்ப்பொருளே!
- பல்வேறு வடிவம் கொள்பவனே!
- பகை கொண்டு முப்புரமாய் நின்ற அரக்கர்களை அழிக்க மேருமலையை வில்லாக ஏந்திய கையை உடையவனே!
- எமனைக் காலால் உதைத்து தண்டித்தவனே!
- கடுமையான நெருப்புப் பிழம்பு போன்ற சிவந்த மேனி உடையவனே!
- செல்வ வளம் மிகுந்த திருப்பெருந்துறையில் செழுமையான மலர்கள் நிறைந்த குருந்த மரத்தின் கீழ் எழுந்தருளிய தலைவனே!
- அடியேனாகிய நான் உதவிக்கு அழைத்தால், என்ன வேண்டும் என்று கேட்டு அருளுவாயகா!

### மரணத்திற்கு எவரும் அஞ்சார் வேதாத்திரியம்

“மரணத்தை நினைத்து அஞ்சி நடுங்கும் கோழை
மனிதனோ அன்றேது? யாவ ரேனும்
மரணம் அடைந்தோர் சவத்தைப் பார்த்துப் பார்த்து
மனங்கலங்கி. உளம்உருகி, அழுவா ரேது?
“மரணம்தான் ஜீவஇனம்இன்ப துன்ப
மாகடலைத தாண்டும்உயர் நிகழ்ச்சி” என்று,
மரணத்தின் நிலையறிந்து, அதற்கு அஞ்சா
மனநிலையில், தெளிவடனே வாழ்வார் மக்கள்.” (ஞாக.பா.1000)

பிறப்பு இறப்பு இயற்கையே. மரணத்தின் நிலையறிந்து அஞ்சாமல் ஆனந்தமாக வாழ்வோமாக.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வாழமுடன்.

# 8. அன்பே கடவுள்

ஒரு துறவி கங்கையில் குளித்துவிட்டுக் கரையேறும் சமயம், அவ்விடத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், சத்தம் போட்டு ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப் பார்த்த துறவி, தன் சீடர்களிடம் திரும்பி சிரித்துக்கொண்டே கேட்கிறார்?

ஏன் மனிதர்கள் கோபத்தில் இருக்கும்போது ஒருவரை ஒருவர் பார்த்து சத்தம்போட்டு சண்டை பிடிக்கிறார்கள்?

சீடர்கள் சில நிமிடங்கள் சிந்திக்கிறார்கள்.....பின்னர்..

சீடர்களில் ஒருவர்: கோபத்தில் நாம் அமைதியை இழக்கிறோம்!

அதனால் சத்தமிடுகிறோம்!

துறவி: ஆனால், உனக்கு மிக சமீபத்தில் இருக்கும் நபரிடம், ஏன் சத்தமிடுகிறாய்?

அவர்கள் உன்னருகில்தானே நிற்கிறார்கள்!

நீ சொல்ல வேண்டியதை அவர்களுக்கு மட்டும் கேட்கும் விதமாக எடுத்துறைக்கலாமே!

ஒவ்வொரு சீடரும் ஒரு காரணம் சொல்கிறார்...... ஆனால் எந்த காரணத்திலும் அடுத்தவர்களுக்கு உடன்பாடில்லை!

கடைசியாக துறவி பதில் கூறுகிறார்..... எப்பொழுது இரு மனிதர்கள், ஒருவர் மீது ஒருவர் கோபம் கொள்கிறார்களோ, அப்பொழுது அவர்களின் மனது இரண்டும் வெகு தொலைவுக்குச் சென்றுவிடுகிறது!

எனவே தூரத்தில் இருக்கும் மனதுக்கு கேட்க வேண்டும் என்பதற்காகவே, சத்தமிடுகிறார்கள்!

மனது எவ்வளவு தூரம் விலகி இருக்கிறதோ, அவ்வளவு தூரம் இவர்கள் தங்கள் ஆற்றலை உபயோகித்து சத்தம்போட வேண்டியிருக்கும்!

அப்பொழுது தானே தங்கள் கருத்து வெகு தொலைவில் இருக்கும் மனதைச் சென்றடையும்!

ஆனால் இதுவே, இரு மனிதர்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பாக இருக்கும்போது என்ன நடக்கிறது?

அவர்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் சத்தமிடுவதில்லை!

அமைதியாகவும், அன்பான முறையிலும் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்துவார்கள்!

காரணம் அவர்களின் மனது இரண்டும் வெகு சமீபத்திலே இருக்கும்!

மனதிற்கு இடையேயான தூரம், மிகக் குறைவாக இருக்கும் அல்லது மனதிரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்தே இருக்கும்!

துறவி தொடர்ந்து கூறுகிறார்.....இதைவிடவும் அதிகமாக ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தும்போது என்ன நடக்கும்?

அவர்கள் ஒருவருக்கொருவர் சத்தமாக பேச தேவையிருக்காது!

அவர்களின் மனதுகள் இரண்டும் கிசுகிசுப்பாக பேசுவதில் இருந்தே, அவர்களின் கருத்துகள் பரிமாறப்படும்!

இன்னும் இன்னும் அன்பு அதிகமாகும்போது வார்த்தையே தேவைப்படாது!

அவர்கள் கண்கள் ஒருவரை ஒருவர் பார்க்கும்போதே, மனதின் எண்ணங்கள் வெளிப்பட்டுவிடும்!

துறவி கடைசியாக சீடர்களைப் பார்த்து கூறுகிறார்........ அதனால் நீங்கள் ஒருவருடன் ஒருவர் வாதிடும்போது,

“உங்கள் மனதுகள் இரண்டும் தொலைவாகப் போய்விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்!

மனதின் தொலைவை அதிகப்படுத்தும் வார்த்தைகளை உபயோகப்படுத்தாதீர்கள்!”

அப்படி செய்யாமல் போனால், ““ஒருநாள் உங்கள் மனங்களிரண்டின் தூரம் கொஞ்சும் கொஞ்சுமாக அதிகமாகி, கடைசியில் ஒன்று சேரும் பாதையே அடைக்கப்பட்டுவிடும் நிலை வந்துவிடும்.!!!

இதைத்தான் “உள்ளத்தில் அன்பு மிகுமாறு நிறைந்து வணங்குபவருக்கு, மேலான வீட்டின்பத்தைத் தந்து அருளும் ஞானமயமானவனே!” என்று திருவாசகம் பாடுகிறது.

“முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டு_அறா மலர் பறித்து இறைஞ்சிப்

பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
 பரகதி கொடுத்து அருள்செய்யும்
சித்தனே செல்வ திருப்பெருந் துறையில்
 செழு மலர் குருந்தம் மேவிய சீர்
அத்தனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
 அதெந்துவே என்று அருளாயே" (திருவாசகம் பா.465)

- வீடுபேறு அருளுபவனே!
- எல்லா உலகங்களுக்கும் மூலமே!
- மூன்று கண்களை உடையவனே!
- தவ வேடம் உடையவனே!
- மலரும் பருவத்தில் உள்ள மலர்களைப் பறித்துத் திருவடிகளில் தூவி, உள்ளத்தில் அன்பு மிகுமாறு நிறைந்து வணங்குபவருக்கு, மேலான வீட்டின்பத்தைத் தந்து அருளும் ஞானமயமானவனே!
- செல்வ வளம் உடைய திருப்பெருந்துயையில் செழுமையான மலர்கள் நிறைந்த குருந்த மரத்தின் கீழ் எழுந்தருளிய எம் தந்தையே!
- அடியேனாகிய நான் உதவிக்கு அழைத்தால், என்ன வேண்டும் என்று கேட்டு அருளுவாயாக!

## அன்பு வழியில் இன்பம் பெருகும் – வேதாத்திரியம்

"இயற்கையாக அமைந்துள்ள உடல் பலத்தை
 இரும்பு முதல் பலவிதமாய் உலோகத் தாலாம்
செயற்கைக் கருவிகளின் மூலம் பெருக்கிக் கொண்டு
 சிந்தனையில் அவரவர்கள் உயர்ந்த மட்டில்.
பயிற்சியினால் ஒருவர்பலர் வாழ்வின் ஊடே,
 பா கம், சாதகம் விளைக்கும் ஆற்றல் பெற்றோம்.
முயற்சியோடு மனிதஇனம் ஒன்றாய் என்றும்
 முறையுடனே வாழஅன்பு வழியில் நிற்போம்." (ஞாக.பா.523)

அன்பு வழியில் நிற்போம். அன்பு வழியில் வாழ்வோம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே வாழத்

தெரிந்திடல் ஆனந்தமே!

# 9.. அருளே வடிவானவன்

அருள் என்றால் என்ன? எங்குள்ளது?

“அருள்” பற்றி வள்ளலார் என்ன சொல்கிறார்?

எல்லா சன்மார்க்கங்களிலும் முக்கிய சொல் “அருள்” ஆகும். அவரவர் சமய மத மார்க்க கடவுளின் அருள் வேண்டி பிரார்த்தனை செய்வர்.

எல்லா மார்க்கங்களிலும் எல்லோரும் தங்களுக்கு வேண்டியதை, இறைவன் தருவதையே “அருள்” என்கிறோம்.

பொதுவாக, நல்ல வாழ்க்கை, படிப்பு, பதவி, வசதி, வயதானால், நோய் குணமாதல், நீண்ட ஆயுள், முடிபான காலத்தில், நல்லபடியாக மரணம், சொர்க்கம் வேண்டுதல், பக்தி முதிர்வில், சமாதி, முக்தி அடைய முயற்சித்தல், முதலிய இவைகளை, இறைவன் அருள வேணுமாய் வேண்டுகிறார்கள்.

1. “அருள்க, அருள்க, மெய் ஞானம் முழுவதையுமே”
2. “உலகில் அருள் விளக்கல் வேண்டும்.”
3. “இடர்தீர் நெறியே அருள்வாய்”
4. “அழிவுறா அருள் உடல் உறுமாறே”

ஆனால், சுத்த சன்மார்க்கத்தில், “அருள்” பற்றிய உண்மை குறித்து வள்ளலார் சொல்லும் போது:

1. இவ்வாறு அருள் பற்றிய விளக்கம் வள்ளலார் தருகிறார்.

ஆக, சுத்த சன்மார்க்கத்தில், அருள் என்பது, இறைவனிடம் நமக்கு வேண்டியதை கேட்பது மட்டுமில்லை, இயற்கை உண்மையறிதலும்,

இறைவன் உண்மை நிலை காண்பதும் ஆகும்.

மேலும், இறைவன் அருள் எத்தகையது, எங்குள்ளது? எனப் பார்க்கும் போது, அகம், புறம் எங்கும் நிறைந்திருக்கும் அருள் ஒளி வண்ணம்.
எல்லா நிலைகளும் தன் அருள் வெளியில் நிலைக்க வைக்கும் தனிக் கடவுள் ஒருவரே என்கிறது சுத்தசன்மார்க்கம்.

இந்த உண்மை தெரிந்து அறிந்து அனுபவிக்க ஆசைப்படும் அறிவே சத்திய அறிவு.

"நின் அருள் மேல் உற்ற பேராசை"
"கொடுத்தருள் நின் அருள் ஒளியை" என்கிறார் வள்ளலார்.

மேலும், "ஆசை உண்டேல் வம்மீன்" என்கிறார்.

அருள் வெளி உண்மையை நம் உள்ளத்திலிருந்து உணர்த்தி, உண்மை அறிவினில் விரித்துக் காட்டுவது ஆண்டவரின் திருவருளே.

"செயல் அனைத்தும் அருள் ஒளியால் காண்க,.. "(6ம் திருமுறை).
சுத்த சன்மார்க்கத்தில் இறைவனிடம் வேண்டுவது:
இத்தேகத்திற்கு நேருகின்ற மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளை நீக்கி பேரின்ப பெருவாழ்வை "அருள" வேண்டும்.

இந்த அருளை (நன்மைகளை) பெற கடவுளது திருவருட் சுதந்திரம் ஒன்றாலே பெறுதல் கூடுமென்கிறார் வள்ளலார்.

ஆக, கடவுள் நிலை காண நன்முயற்சி இடைவிடாது செய்தல் வேண்டும் என்கிறது சுத்த சன்மார்க்கம்.

"பரை வெளிக்கு அப்பால் விளங்கு தனி வெளியில்...அருட்சோதி " என்கிறார்.

மொத்தத்தில், சுத்த சன்மார்க்கத்தார் ஒழுக்கம் நிரப்பி,
தயை உடையவராகவும், உண்மை தெரிந்து கொள்ள ஆசை உடையவராகவும் இருந்து, இடைவிடாது கருணை நன்முயற்சியில் இருப்பதே அருள் (நன்மையும், உண்மையும்) பெறுவதற்கான வழி ஆகும்.

- "தயை உடையார் எல்லாரும் சமரச சன்மார்க்கம் சார்ந்தவரே"
- "அருளுடையார் எல்லாரும் சமரச சன்மார்க்கம் அடைந்தவரே"

என்கிறார் வள்ளலார்.

"மருளனேன் மனத்தை மயக்கு_அற நோக்கி
    மறுமையோடு இம்மையும் கெடுத்த
பொருளனே புனிதா பொங்கு வாள் அரவம்
    கங்கை நீர் தங்கு செம் சடையாய்
தெருளும் நான்மறை சேர் திருப்பெருந் துறையில்
    செழு மலர் குருந்தம் மேவிய சீர்
அருளனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
    அதெந்துவே என்று அருளாயே" (திருவாசகம் பா.466)

- மருண்ட உள்ளம் உடைய எனது அறியாமையைப் போக்கி, இம்மை மறுமை என்ற இரண்டையும் ஒழித்த ஒரு பொருள் ஆனவனே!
- தூயதன்மை உடையவனே!
- சீறுகின்ற ஒளி உடைய பாம்பும் கங்கையும் தங்கி இருக்கும் சிவந்த சடையை உடையவனே!

- வெளிவை உண்டு பண்ணும் நான்கு வேதங்கள் முழுங்குகின்ற திருப்பெருந்துறையில் செழுமையான மலர்கள் நிறைந்த குருந்த மரத்தின் கீழ் எழுந்தருளிய அருளே வடிவானவனே!
- அடியேனாகிய நான் உதவி கேட்டு அழைத்தால், என்ன வேண்டும் என்று கேட்டு அருளுவாயாக!

## அருள் என்பதே திருவருளின் தன்மை வேதாத்திரியம்

"அருளமுதம் பெறவேண்டி அகத்தவம் புரிந்தேன்.
அறிவதனின் மூன்றுநிலை அற்புதம் உணர்ந்தேன்
திருவருளாம் தெய்வநிலை ஆதிவெளி யாச்சு.
தேர்ந்து கொண்டேன் அந்தத் திருவருளின் தன்மை,
இருநெறியாம் அறிவு அசைவென்னும் மறைபொருளாய்,
இணையற்ற இப்பொருளே மெய்யும் உயிராக,
உருவவழி கருவழி என்றிரண்டு பிரிவாகி,
உலகங்கள் உயிர்வகைகள் மனிதனுமாய்க் கண்டேன்!".
(ஞாக.பா.708)

அருளே வடிவானது இறைநிலை. இறைநிலையிலிருந்து வந்த நாமும் நம்மைச் சுற்றி இருக்கும் அனைவரும் நடமாடும் தெய்வங்களே என எண்ணி அன்பு பாராட்டி அன்பு செலுத்தி அன்புடன் ஆனந்தமாக வாழ்வோமாக.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வாழமுடன்.

# 10.பிறவியாகிய அலை வீசும் கடல் நடுவில்

அது ஒரு பெரிய குரு குலம். அங்கு தலைமை குருவாக இருந்தவர், இன்னும் சில ஆண்டுகளில் தனது இறுதி காலத்தை எட்ட இருப்பதை நினைத்துக் கொண்டார்.

அவருக்கு ஒரு ஆசை பிறந்தது. மறு பிறவியில் நாம் என்னவாக பிறக்கப் போகிறோம் என்று அறிந்து கொள்ள அவர் ஆசை கொண்டார்.

மறுபிறவியைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தவம் இயற்ற முன்வந்தார். அந்த தவத்தின் பலனாக அவர் ஐந்து ஆண்டுகளில் இறக்கப் போவதையும், மறு பிறவியில் அவர் பன்றியாக பிறக்கப் போவதையும் அறிந்தார்.

தன்னுடைய அடுத்தப் பிறவி பன்றி என்பதை அவரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அது ஒரு இழிபிறவி போல் அவருக்குத் தோன்றியது.

எனவே தன்னுடைய சீடர்களில் முதன்மையானவனும், தனக்குப் பிரியமானவனுமான ஒரு சீடனை அழைத்தார்.

அவனது கையில் ஒரு வாளைக் கொடுத்தார். அந்த சீடன் என்ன ஏதென்று தெரியாமல் விழித்தான். இருந்தாலும் குரு தருவதை எப்படி வாங்க மறுப்பது? வாங்கிக் கொண்டான்.

இப்போது குரு பேசத் தொடங்கினார்.

'சீடனே! என்னுடைய இறுதி காலம் எனக்குத் தெரிந்து விட்டது. ஆனால் நான் எடுக்கப்போகும் மறுபிறவி அவ்வளவு சிறப்பானதாக இல்லை. அடுத்தப் பிறவியில் நான் பன்றியாக பிறப்பெடுக்க உள்ளேன்.

எனவே நீ இப்போதே புறப்படு. இன்னும் ஐந்து ஆண்டுகளில் நான் பிறந்திருக்கும் ஊரை அடைவாய். அங்கு பன்றியாக இருக்கும் என்னுடைய நெற்றியில், தற்போதைய என்னுடைய உருவம் தோன்றி மறையும்.

அதை வைத்து நான் தான் அது என்பதை புரிந்து கொண்டு, என்னை வாளால் வெட்டிக் கொன்றுவிடு' என்றவர், மறுபிறவியில் தான் பிறக்கப்போகும் ஊரையும் சொல்லி அனுப்பினார்.

கால்நடையாக தன்னுடைய பெரும் பயணத்தை அந்த சீடன் தொடர்ந்தான். அவனது பயணம் ஐந்து ஆண்டுகளின் முடிவில், அவனது குரு சொன்ன இடத்திலேயே போய் முடிந்தது.

அங்கு தன் கண்ணில் பட்ட சில பன்றிகளை உற்று நோக்கினான். ஆனால் அதில் தன் குரு இல்லை என்பதை உணர்ந்தான்.

பின்னர் அங்கிருந்த ஒருவரிடம், ‘இங்கே அதிகமான பன்றிகள் எங்கே இருக்கிறது?’ என்று கேட்டார்.

சீடனின் கேள்வியைக் கேட்டதும், அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார் அந்த நபர். இருப்பினும் அந்த இடத்தைச் சுட்டிக்காட்டினார்.

அங்கு சென்ற சீடன், பன்றிக்கூட்டத்தின் நடுவே தன்னுடைய குருவைத் தேடினான். அப்போது ஒரு பன்றியின் நெற்றியில் குருவின் உருவம் தென்பட்டது. அந்தப் பன்றியை மட்டும் தனியாகப் பிடித்து வந்து, வாளால் வெட்ட முயன்றான்.

அப்போது அந்தப் பன்றி பேசத் தொடங்கியது.
‘சீடா! நான் இந்த வாழ்வில் ஆனந்தமாக இருக்கிறேன். அதைக் கெடுத்துவிடாதே’ என்றது.

சீடன் அதிர்ச்சியில் விக்கித்து நின்றுவிட்டான்.

ஆம்! யார்.. எந்த நிலையில் இருக்கிறார்களோ.. அவர்களுக்கு அந்த நிலை சிறப்பானதாகவே தோன்றும்.

மனிதனாக இருந்தபோது, கீழ்நிலை பிறவியாக தோன்றிய பன்றி, அந்த குருவிற்கு இப்போது மகிழ்ச்சியான சொர்க்கபுரியாக தோன்றுகிறது. இது எல்லா ஜீவராசிகளுக்கும் பொருந்தக்கூடியது என்பதுதான் இறைவனின் அழகிய படைப்புத் திறன்.

“பிறவியாகிய அலை வீசும் கடல் நடுவில் நிற்கும் என்னை,

கயிலைக்குச் செல்லும் வழி இதுதான். வருக! என்ற கூவி அழைத்து அருள் செய்வாயாக!" என்று திருவாசகம் பாடுகிறது.

திருந்து வார் பொழில் சூழ் திருப்பெருந் துறையில்
  செழு மலர் குருந்தம் மேவிய சீர்
இருந்தவாறு எண்ணி ஏசறா நினைந்திட்டு
  என்னுடை எம்பிரான் என்றுஎன்று
அருந்தவா நினைந்தே ஆதரித்து அழைத்தால்
  அலை கடல்-அதன் உளே நின்று
பொருந்த வா கயிலை புகு நெறி இது காண்
  போதராய் என்று அருளாயே" (திருவாசகம் பா.467)

- அரிய தவம் உடையவனே!
- திருந்திய பெரிய சோலை சூழ்ந்த திருப்பெருந்துறையில் செழுமையான மலர்கள் நிறைந்த குருந்த மரத்தின் கீழ் எழுந்தருளிய தன்மையை,
- பலமுறை நினைந்து "பெருமானே பெருமானே!" என்று வருந்தி, உதவிக்கு அழைத்தால்,

## பிறப்பு இறப்பு எனும் கடலை நீந்த - வேதாத்திரியம்

"பிறப்பு இறப்பு எனும் கடலை நீந்தவென்றால்,
  பெருவிழிப்பாய் இருவழியில் வெற்றி வேண்டும்.
பிறப்பு எழாமல் புதிதாய்க் குருவின் மூலம்
  பேணிப் பாலுறவு அறவே தடுக்க வேண்டும்.
பிறப்பதனைப் பெருக்குகின்ற தன்முனைப்பு,
  பெரும்பாவப் பதிவுகளும் பற்றும் போக்கி,
பிற்பறுக்கும் அகத்தவமும் அறமும்ஆற்றி,
  பேரறிவாய் அறிவறிந்து நிலைக்க வேண்டும்." (ஞாக.பா.1314)

பிறப்பறுக்கும் அகத்தவதையும் அறத்தையும் நாள்தோறும் ஆற்றி ஆனந்தமாக வாழ்வோமாக.

திருவாசக வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே. வாழ்க வாழமுடன்.

## வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருள் பத்து

## YOUTUBE LINKS

1. அழைத்தால் அருளும் இறைநிலை https://youtu.be/xb_A5ZuOWdA
2. மூன்றாவது கண் சில உண்மைகள்! https://youtu.be/NvoSbrKMb-0
3. நல்லொழுக்க வாழ்க்கை முறை https://youtu.be/tmSwh9-leg4
4. என் மனத்துள்ளே எழுகின்ற ஜோதியே https://youtu.be/tmSwh9-leg4
5. ஆண்டவன் கணக்கு https://youtu.be/8TAFRkFaqog
6. இறைநிலையோடு எண்ணத்தைக் கலக்க விட்டு https://youtu.be/fQbCNy25YTA
7. காலனை எட்டி உதைத்த இறைவன் https://youtu.be/Td699q1jZ8k
8. அன்பே கடவுள் https://youtu.be/0gJnOwqyxCg
9. அருளே வடிவானவன் https://youtu.be/HAUvJqiN0RM
10. பிறவியாகிய அலை வீசும் கடல் நடுவில் https://youtu.be/sPE94D51W4k

# துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், சுவாமி சித்பவனாந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
4. இணையதள தகவல்கள்.

5. மாக்கோலம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
6. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
7. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
8. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை
9. இராமலிங்க வள்ளலார் பாடல்கள்

.

# பானுகுமார் படைப்புலகம்

(164 புத்தகங்கள்)

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. "வாழ்க வளமுடன்" என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.

26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்சிதானந்த சிவம்.

7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.

7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## vethathiriam Banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்கனை அடியிற்கண்ட 119 தலைப்புகளில் vethathiriam Banukumar vஎன்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து

30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3

65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு

100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108. Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?